ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1958/63 - 2016 මාර්තු මස 18 වැනි සිකුරාදා - 2016.03.18
1958/63 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KDS/HAR/4/2/1/40.

காணி அமைச்சின் குறி இல.: 4/3/9/2014/WS /28.

கண்டி வடக்கு - பாத்ததும்பர இணைந்த நீர் வழங்கல் கருத்திட்டத்தின் குலுகம்மன பம்பி நிலையத்தினை நிர்மாணிப்பதற்கு கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாங்கம் எண்ணியிருக்கிறது என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இல. காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாண கண்டி மாவட்டத்தில், ஹாரிஸிபத்துவ பிரதேச செயலாளர் பிரிவில், குலுகம்மன சியபத்துவ சிறு பிரிவின் குலுகம்மன கிராமத்தில் அமைந்த கண்டி மாவட்ட சிரேஷ்ட நில அளவையாளரினால் அளந்து தயாரிக்கப்பட்ட சுமார் 0.0250 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட அ.வ.மஹ./6534 (அடிப்படையான வரைபடத்தில்) விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டு 1.

**1. துண்டு இல. 01**

காணியின் பெயர்: பன்சல் வத்த எனப்படும் பன்சல் அரம; உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.0250 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகர்ரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகத்தில் என்முன்பாக தோன்றும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுப்பதற்கான நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்பயும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படு கின்றனர்.

ஆர். எம். பீ. எஸ். பி. ரத்நாயக்கா,
பிரதேச செயலாளர்,
ஹாரிஸ்பத்துவ.

பிரதேச செயலகம்,
ஹாரிஸ்பத்துவ,
2016, மாச்சு 16.

4 - 333

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.